# இலக்கணம் பயிற்றும் முறைகள்

**முனைவர் வா. விஜயலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர், தமிழ் துறை*
*தியாகராசர் கல்வியியல் கல்லூரி, மதுரை*

**முன்னுரை**

இலக்கணம் கற்பதன் நோக்கம் கற்பிக்கும் முறைகள் இலக்கணப் பாடத்தை மாணவர்கள் வெறுக்க காரணம், இலக்கணப் பாடத்தை எளிமையாக எவ்வாறு கற்பிக்கலாம், இலக்கணத்தை முறையாக எந்த வகுப்பில் இருந்து கற்பிக்க தொடங்கலாம் என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மொழிப்பற்று**

மாணவர்களிடையே முதலில் மொழிப்பற்றை வளர்க்கவேண்டும். மொழியின் மீது பற்று இருந்தால் தான் அம்மொழியை திறம்பட கற்கமுடியும்.

"திருப்புகழில் மணம் கமழும் தமிழே
திருவாசகமெனும் தேனில் ஊறிய தமிழே
திருவருட்பாவில் அமைந்ததிருவுருவே
தெய்வத்தையேவசமாக்கும் தமிழே
வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை உனையே சாரும்."

"கனியிடைஏறியசுளையும் முற்றல்
கழையிடைஏறியசாறும்
பனிமலர் ஏறியதேனும் காய்ச்சுப்
பாகிடைஏறியசுவையும்
நனிபசுபொழியும் பாலும் தென்னை
நல்கியகுளிரிளநீரும்
இனியனஎன்பேன் எனினும் தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

"வாழும் போதுதமிழ் படித்துவாழவேண்டும்
சாகும் போதுஎன் சாம்பலில் தமிழ் மணம்
வீசவேண்டும்."

அன்னைமொழியே !
அழகார்ந்தசெந்தமிழே !
முன்னைக்கும் முன்னை
முகிழ்ந்தநறுங்கனியே !
கன்னிக்குமரி கடல் கொண்டநாட்டிடையில்
மன்னிஅரசிருந்தமண்ணுலகபேரரசே !
தென்னன் மகளே !
திருக்குறளின் மாண்புகழே!

(பெரும்சித்தரனார்)

"சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே
அதைத் தொழுதுபடித்திடடிபாப்பா".

(பாரதியார்)

"இருந்தமிழேஉன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

(தமிழ்விடுதூது)

இது போன்ற தமிழ் மொழியின் இனிமையையும், பெருமையையும் உணர்த்தும் பாடல்களை மாணவர்களுக்கு கூறிதமிழ் மொழியின் மீதுமாணவர்களுக்குமொழிப்பற்றைவளர்க்கவேண்டும்.

**இலக்கணம் சொல் விளக்கம்**

இலக்கு + அணம் = இலக்கணம். ‘இலக்கு’ என்பது துவங்குவது, விளங்குதல், இலங்கச்செய்தல், நோக்கம். ‘அணம் என்பது அண் எனும் வேர் சொல்லில் இருந்து வந்த அணி எனும் சொல்லாகும். அணி என்பது அணிவது பொருந்துவது. மொழிக்கு இலக்காக பொருந்திய இயல்தனை இலக்கணமென தமிழ் அறிஞர்கள் வழங்கியுள்ளனர்.

**“எலனையோர்க்கும் இன்மையில் தன்மை**
**இயற்றுதற்கு இன்பம் பயக்கும் ஓரிலக்குவேண்டும்**
**உயிர்க்குஅது தூண்டுகோள்.போலாம்”.(பேராசிரியர் சுந்தரம்பிள்ளை)**

**இலக்கணம் கற்பதன் நோக்கம்**

எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தில் இருந்தே இலக்கணத்தை உருவாக்கியுள்ளார்கள். **இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்றார் பவணந்தி முனிவர்.** ஒரு மொழியைத் திருத்தமாகவும், செம்மையாகவும், உரையாடுவதற்கும், எழுதுவதற்கும் மொழியின் அடிப்படையை முழுவதும் உணர்வதற்கும் விதிவிலக்குகளை விளக்குவதற்கும் உறுதுணையாய் இருப்பது இலக்கணமேயாகும்.

**“எண்ணென்பஏனையழுத் தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்பவாழுமுயிற்க்கு”**

என்று திருக்குறல் கூறுகிறது. எழுத்து என்பது ஈண்டு இலக்கணத்தை சுட்டும்.

ஒரு மொழியின் இயல்புகளை பற்றிய அறிவு அம்மொழியினைச் செம்மையாகக் கற்பதற்கு கட்டாயம் துணைச் செய்வது இலக்கணமேயாகும்.

குழந்தைகள் பேச்சில் காணப்படும் வட்டாரவழக்குகள், கொச்சைமொழிகள், வழூஉச்சொற்கள் அதிகமாக காணப்படும் அவற்றைகளைந்து அவர்கள் திருந்திய மொழியில் பேசவும், எழுதவும் வழி வகுப்பது இலக்கணம் பயிற்றலின் நோக்கமாகும்.

**“எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும்**
**எழுத்தறிவார் காணின் இலையாம்”**

எனும் குமரகுருபரர் வாக்கு இலக்கணத்தின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகிறது.

**“இன்பம் இன்பம் இலக்கணமே**
**இனிதாய் கற்கின் அரைக்கணமே”. (தணிகைஉலகநாதன்)**

**இலக்கணம் கற்பிக்கும் முறைகள்**

முதல் இரண்டு வகுப்புகளில் எழுத்துகளை கற்றுக் கொடுக்கவேண்டும். எழுத்துகளை ஒலிக்கும் முறையையும் அவற்றை எழுதும் முறையையும் கற்றுக்கொடுக்க வேண்டும். மூன்றாம் வகுப்பில் எழுத்துகளின் வரிசையை தெரிவிக்கவேண்டும். நான்காம் வகுப்பில் உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தஎழுத்து, குறில், நெடில், வினாசுட்டு எழுத்துகள் ஆகிய எழுத்துகளையும் ஐந்தாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை தன்மை, முன்னிலை, படர்க்கை, பெயர்களையும் உயர்திணை, அஃறிணையும், வகைகளையும் பால் வகையான ஆண்பால், பெண்பால், பலர்பால், பலவின் பால், ஒன்றன் பால் முக்காலமான இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய கால வகைகளையும் பாட நூல் கற்பிக்கும் போது இவற்றை கற்பிக்கலாம்.

எட்டாம் வகுப்பில் இருந்தே முறையான இலக்கணத்தை கற்பிக்க வேண்டும். வாக்கிய வகைகள், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல், எழுத்து இலக்கணத்தில் முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள், மாத்திரை, இடுகுறிப்பெயர், காரணப்பெயர், ஆகுப்பெயர், வினாப்பெயர், பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி இலக்கணம், அணியிலக்கணம் போன்றவற்றை கற்பிக்கலாம்.

**இலக்கணத்தைகற்பிக்கும் வகைகள்**

1. ஒழுங்குமுறை இலக்கணம்
2. நடைமுறை இலக்கணம்
3. வரலாற்றுமுறை இலக்கணம்

**இலக்கணம் கற்பிக்கும் முறைகள்**

விதிவருமுறை

விதிவிளக்குமுறை

**இலக்கணப் பாடத்தை எவ்வாறு எளிமையாக கற்பித்தல்**

விதிவருமுறையை பயன்படுத்தி இலக்கணம் கற்பதே எளிமையான முறையாகும். விதிவருமுறை என்பது மாணவர்களின் அறிவு நிலைக்கேற்ப அவர்கள் அறிந்தவற்றில் இருந்து எடுத்துக்காட்டுகளை கூறி பொதுவிதியை மாணவர்கள் வாயிலிருந்தே வரவழைப்பதே விதிவருமுறை எனப்படும்..

**விதிவருவித்தல் முறையை பயன்படுத்தி ஆகுபெயரையும் அதன் வகைகளையும் கற்பிப்போம்.**

**(எ.க)** காஞ்சிபுரம் என்னவிலை ?

ஊர் சிரித்தது

தலைக்குஒருஆப்பில் கொடு

கார் அறுத்தான்

முல்லைதொடுத்தாள்

மங்கைமஞ்சள் பூசினாள்

நான் பொங்கல் உண்டேன்

இவற்றை கரும்பலகையில் எழுதி மாணவர்களிடம் இந்த சொற்றொடர்களில் காஞ்சிபுரம், ஊர், தலை, கார், முல்லை, மங்கை, பொங்கல், ஆகியவை எவற்றைக் குறிக்கின்றன என்பதை வினவி தகுந்த விடை கூறும் படிசெய்தல் வேண்டும்.

காஞ்சிபுரம் என்பது காஞ்சிபுரத்தில் நெய்யப்படும் புடவையை குறிப்பதால் பொருளுக்கு ஆகிவருவதால் இது **பொருளாகுபெயர்**.

ஊர் என்பது இடத்தை குறிப்பதால் **இடவாகுபெயர்.**

கார் என்பது நெல்லை குறிப்பதால் தைமாதத்தில் நெல் அறுப்பதால் காலத்தை குறிப்பதால் இது **காலவாகுபெயர்.**

தலை என்பது மனிதனின் உடல் உறுப்பை குறிப்பதால் இது **சினையாகுபெயர்**.

மங்கை மஞ்சள் பூசினாள். வண்ணம் வடிவம் போன்றவற்றை குறித்தால் அது **பண்பாகுபெயர்** ஆகும்.

பொங்கல் உண்டேன் என்பது உண்டேன் என்ற செயலை குறிப்பதால் இது **தொழில் ஆகுபெயராகும்**. இவ்வாறு எளிமையாக கற்பிக்கலாம்.

**புணர்ச்சி இலக்கணம்**

மா+செடி --- மாஞ்செடி

மா+ பூ --- மாம்பூ

மா+ காய் --- மாங்காய்

மா+ பழம் --- மாம்பழம்

உயிர் எழுத்தை இறுதியாக கொண்ட மரப்பெயர்களுக்கு முன் மெல்லினம் மிகும்

மாஞ்செடி – டி என்பது (ட்+இ) டி என்ற உயிர் எழுத்து ஆகும்.

மாம்பூ - பூ என்பது ஊ என்ற உயிர் எழுத்தாகும்.

மாங்காய் - ய என்பது ஆ என்ற உயிர் எழுத்தாகும்.

‘பூ’ பெயர்களுக்கு முன் மெல்லினம் மிகும்.

பூ கொடி–பூங்கொடி
பூ சோலை --- பூஞ்சோலை
பூ தொட்டி --- பூந்தொட்டி

இம்முறையில் பல எடுத்துக்காட்டுகளை மாணவர்களுக்கு கூறி விளக்கி பொதுவிதியை அறியசெய்யலாம்.

**இலக்கணத்தை மாணவர்கள் வெறுக்க காரணம்**

1. தொடக்க நிலைவகுப்புகளில் தொடங்குதல்
2. ஒழுங்குமுறை இலக்கணத்தைக் கற்பித்தல்
3. நடத்தும் முறை
4. தனி இலக்கணம் கற்பித்தல்
5. பிறபாடங்களோடு தொடர்புபடுத்தாமை
6. எடுத்துக்காட்டுகள்
7. வாக்கியத்தில் அமைத்து கற்காமை
8. மனனம் செய்யுமாறு வற்புறுத்துதல்
9. எழுத்துப்பயிற்சி அளிக்காமை
10. புதியமுறையை பின்பற்றாமை
11. பற்றும் விருப்பமும் கொள்ளாமை
12. அலட்சிய மனபான்மை
13. வழக்கில் இல்லாதவற்றை கூறுதல்
14. மொழிபயிற்சியின்மை
15. விளையாட்டு முறையை பயன்படுத்தாமை

இவற்றைகளைந்து மாணவர்களின் பட்டறிவுக்கேற்ப எடுத்துக்காட்டுகளைத் தேர்ந்தெடுத்து கற்பிக்கவேண்டும்.

**முடிவுரை**

மாணவர்கள் அவர்கள் அறிந்த பல செய்திகளிலிருந்து அறியாத ஒருபொதுவிதியை அறிந்துக்கொள்ள செய்யவேண்டும். எளிமையிலிருந்து அருமை என்ற உளநூல் முறையில் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் புதிய விதிகளைத் தாமே கண்டுபிடிக்கும் வழிமுறைகளை சொல்லி கொடுக்கவேண்டும். மாணவர்கள் தாங்களே ஒருவிதியை கண்டுபிடித்ததாக எண்ணி மகிழ்ச்சியடைவார்கள். அதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை வளர்கிறது. காட்சிபொருளிலிருந்து கருத்துப்பொருளுக்கு மாணவரை அழைத்துச் செல்கிறது. பிறர் உதவியின்றிகற்கும் வாய்ப்பையும் ஆர்வத்தையும் மாணவர்களிடையே ஏற்படுத்தவேண்டும். கற்றலில் பின் தங்கிய மாணவனையும் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு கற்பித்தால் மாணவர்கள் இலக்கணத்தை வெறுக்காமல் விரும்பிகற்பார்கள்.

**துணை நூல்கள்**

1. நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும் - மு. கோவிந்தராசன்
2. தமிழ் பயிற்றுமுறைகள் - ந. சுப்புரெட்டியார்
3. தமிழ் பாடஞ் சொல்லும் முறைகள் - பா. பொன்னயன்
4. தமிழ் கற்பிக்கும் முறைகள் - ச. ஆறுமுகமுதலியார்
5. பயிற்றுப்பயிற்சியும்,மொழியாசிரியர்களும்
6. தமிழ் பாடம் சொல்லும் முறை–தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்